# Official Spokesperson's response to media queries on a press release no. 238/2020 dated 4th June 2020 by Pakistan Foreign Office

June 05, 2020

## பாகிஸ்தான் வெளியுறவு அலுவலகத்தால் வெளியிட்ட பத்திரிக்கை வெளியீடு 238/2020 4 ஜூன் 2020 தேதியிட்ட செய்திகுறிப்பு பற்றிய ஊடகக் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அளித்த பதில்

ஜூன் 05, 2020

பாகிஸ்தான் வெளியுறவு அலுவலகத்தால் வெளியிட்ட பத்திரிக்கை வெளியீடு 238/2020 4 ஜூன் 2020 தேதியிட்ட செய்திகுறிப்பு பற்றிய ஊடகக் கேள்விகளுக்கு பதிலளிக்கையில், அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. அனுராக் ஸ்ரீவத்சவா கூறியதாவது,

"பாகிஸ்தானில் இன்னும் 30,000 முதல் 40,000 பயங்கரவாதிகள் உள்ளனர் என்பதை கடந்த ஆண்டு தங்கள் பிரதமர் ஒப்புக்கொண்டதை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் நினைவு கூர்வது நல்லது. கடந்த காலங்களில் பயங்கரவாதிகள் மற்ற மண்ணின் மீது பயங்கரவாதத் தாகுதல்களை நடத்த நாட்டின் மண்ணைப் பயன்படுத்தினர் என்பதை பாகிஸ்தானின் தலைமையும் ஒப்புக்கொள்கிறது.

ஐ.ந. பாதுகாப்பு குழுவின் பகுப்பாய்வு ஆதரவு மற்றும் பொருளாதார தடைகள் கண்காணிப்பு குழு அறிக்கை பாகிஸ்தான் பிரதமர் ஏற்கனவே ஒப்புக்கொண்டதை மட்டுமே மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அறிக்கையில் அபிலாஷகளை வெளியிடுவதற்கு பதிலாக, பாகிஸ்தான் அதன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இருந்து வெளிவரும் பயங்கரவாதத்திற்கு எந்தவிதமான ஆதரவையும் ஆராய்ந்து முற்றுபுள்ளி வைக்க வேண்டும். பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் நரம்பு மையம் என்ற யதார்த்தத்தை ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகம் நன்கு அறிந்திருக்கிறது. இது ஐ.நா. சுட்டிகாட்டிய பயங்கரவாதிகள் மற்றும் பயங்கரவாத நிறுவனங்களின் மிகப் பெரிய எண்ணிக்கையில் ஒன்றாகும். மற்றவர்களுக்கு விரல் காட்ட அதன் தவறான முயற்சிகள் தரையில் உள்ள உண்மைகளிலிருந்து திசை திருப்ப முடியாது.

மேலும், இந்திய மற்றும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய மற்றும் நட்பு உறவுகளில் பிளவுகளை ஏற்படுத்த பாகிஸ்தானின் முயற்சிகள் வெற்றிபெறாது. ஆப்கானிஸ்தான் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ' ஸ்பாய்லர்' யார் என்பதையும், பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம், பயிற்சி, ஆயுதம் மற்றும் நிதியுதவி அளிப்பதும், அப்பாவி ஆப்கானியர்கள் மற்றும் சர்வதேச சமூக உறுப்பினர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நிதிஉதவி செய்வதும் யார் என்பதை நன்கு அறிவார்கள்."

**நியூ டெல்லி**
**ஜூன் 05, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.